காலை முரசு
பக்கங்கள்:-15

## தமிழரசின் ஆதரவுக்கு சஜித் நன்றி தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்துள்ளார். 07

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 17 | திங்கட்கிழமை | 02.09.2024 | அதிர்வு 031

# சஜித்தை ஆதரிக்கும் அறிவிப்பு தமிழரசுக் கட்சியின் முடிவல்ல!

## கட்சியின் தலைவர் மாவை தெரிவிப்பு





**ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று வெளியாகியுள்ள தகவல், கட்சியின் முடிவல்ல என்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.** 06

# மத்திய குழுத் தீர்மானம் கூட்டுத் தீர்மானமே!

## மாவையின் கருத்துக்கு சத்தியலிங்கம் பதில்




(கே.வசந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுத் தீர்மானம் என்பது கூட்டுத் தீர்மானமே என்று கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்குத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்றைய கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மறுப்புத் தெரிவித்து அது கட்சியின் 06

# பெரும்பாலானவர்களின் சம்மதத்துடனேயே மூன்று தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றம்

## தமிழரசின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே. விளக்கம்



(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் விருப்புக்கிணங்கவே ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் 07



உள்கட்சிக் குழப்பதை வசமாகப் பயன்படுத்தித் தசாப்த காலத்துக்கு மேல் கட்சித் தலைவராக நீடிக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தாம் பதவியை விட்டு இறங்க முன் கட்சியை உண்டு, இல்லை என்று துவம்சம் பண்ணி விட்டுத் தான் ஓய்வார் போலத் தோன்றுகின்றது.

முக்கிய முடிவு – தீர்மானம் – எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கும் கட்சியின் கூட்டத்துக்குத் தாம் செல்லாமல் விட்டு விட்டால், கட்சி முடிவை எடுக்க முடியாது என்று அவர் கருதுவது சிறுபிள்ளைத்தனமானது. அபத்தமானது.

நாளை மறுதினம் ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு நடைபெறப் போகின்றது. இந்தத் தேர்தல் தொடர்பில் கட்சி என்ன முடிவு எடுத்து 06







# வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 5 வருட அவகாசம் கோருகின்றார் ஜனாதிபதி

“கடந்த இரண்டு வருடங்களில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்தைப் பலமான ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வருவதற்காகவே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றேன். அதற்காக 5 வருட கால அவகாசத்தை மாத்திரமே கோருகின்றேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா யங் ஸ்டார் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற “இயலும் ஸ்ரீலங்கா” வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இரண்டு வருடங்களுக்கு முன்னர் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்றி மக்கள் இருந்தனர். பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஷபக்ஷ விலகினார். சஜித் பதவியை ஏற்பார் என்று நாம் நினைத்தோம். முடியாது என சஜித் அறிவித்தார். மறுநாள் சரத் பொன்சேக்காவை பதவி ஏற்கப் போவதாக அறிந்தோம். ஆனால் யாரும் ஏற்கவில்லை. அதன் பின்னர் கோட்டாபய எனக்கு அழைப்பு விடுத்தார். நான் தனியாகச் சென்றேன். பொறுப்பை ஏற்குமாறு இங்குள்ள எம்.பிகள் எனக்கு தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகிய போது எனக்கு பொறுப்பேற்க வேண்டாம் என்றனர். அனைவரும் தப்பி ஓடினார்கள். அன்று நான் நாட்டைப் பொறுப்பேற்கவில்லையெனில், இன்னுமொரு பங்களாதேஷாக எமது நாடு மாறியிருக்கும். அந்த நிலையில் என்னை ரணில் ராஜபக்ஷ என்று அவர்கள் திட்டினார்கள். இன்று ராஜபக்ஷவினர் தனியாகச் சென்றுள்ளனர்.

பங்களாதேஷாக மாற இருந்த நாட்டை நான் மீட்டுள்ளேன். பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டும் தேர்தல் நடத்த முடியாதுள்ளது. 29 எம்.பிகள் கொல்லப்பட்டனர். பிரதம நீதியரசர் துரத்தப்பட்டுள்ளார். அங்கு தேர்தல் நடத்த முடியாதுள்ளது. இங்கு செப்டம்பர் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெற இருக்கிறது.

இப்பொழுது தான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே எனக்கு தேர்தலில் போட்டியிட முழு உரிமையுள்ளது தானே. தப்பியோடியவர்களை என்ன செய்யலாம்? அவர்களை மறந்து விடாதீர்கள். அவர்களுக்கு இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொடுங்கள்.

நாம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியுள்ள நிலையில் அதனை மேலும் ஸ்திரப்படுத்தவே நான் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றேன். எந்தநாளும் கடன்பெற்றுக் கொண்டிருக்க முடியாது. எனவே ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்தி வெளிநாட்டு செலாவணி மிகையை ஏற்படுத்த வேண்டும். வீடு உடைந்து விழுந்தால் என்ன செய்வீர்கள்? அதனை வலுவான அடித்தளத்துடன் கட்டியெழுப்ப வேண்டும். அடித்தளத்தில் உள்ள குறைபாடுகளை சீர்செய்ய வேண்டும். அதனால்தான் இப்பணிகளை நிறைவு செய்வதற்காக நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். ஐ.எம்.எவ்., ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிறுவனங்களினதும் 17 நாடுகளினதும் ஒத்துழைப்பைப் பெற்றுள்ளோம். அதில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் உள்ளடங்குகின்றன. நிலையான கட்டடமொன்றை கட்டியெழுப்பவே நான் போட்டியிடுகின்றேன்.

5 வருடங்கள் தான் ஆட்சிப் பொறுப்பைக் கேட்கிறேன். 4 வருடத்தில் அந்தப் பணிகளை நிறைவு செய்வேன். வாழ்க்கைச் செலவைக் குறைப்பது மற்றும் வாழ்க்கைச் செலவு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பது, வரி நிவாரணம் வழங்குவது, அதிகளவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது, பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவது,“உறுமய”, “அஸ்வெசும” என்ப

தொடர்ச்சி▼















# வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 5 வருட அவகாசம் கோருகின்றார் ஜனாதிபதி

தொடர்ச்சி▲

வற்றை தொடர்வது என்பனவே எனது இலக்குகளாகும்.

2024 இல் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. வாழ்க்கைச் செலவு மேலும் குறையும். 2019 இல் வரியைக் குறைத்ததால் உரம் இல்லாத நிலை ஏற்பட்டது. அந்த நிலைக்கு மீண்டும் செல்ல வேண்டுமா? கடந்த 4 வருடங்களாக தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. அடுத்த வருடம் ஒரு லட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவோம். ஏனைய கட்சிகள் தொழில் வழங்குவது தொர்பில் எதுவும் குறிப்பிடவில்லை. 22 ஆம் திகதி முதல் எமது திட்டங்களை செயற்படுத்த இருக்கிறோம்.

மன்னர், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசத்தை முன்னேற்ற வேண்டும். விவசாய நவீனமயமாக்கலை மேற்கொள்ள வேண்டும். மல்வதுஓய ஊடாக யோதவாவிக்கு நீர் அனுப்பிவோம். சுற்றுலாத் துறை முன்னேறினால் இப்பகுதியிலும் சுற்றுலாத்துறை முன்னேறும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாங்குளம் போன்ற பகுதிகளில் முதலீட்டு வலயங்களை உருவாக்க இருக்கிறோம். காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பிக்க இருக்கிறோம். இங்கு சூரிய சக்தி உற்பத்தியை முன்னேற்றலாம். சூரிய மின் உற்பத்தியை மேற்கொண்டு இந்தியாவுக்கு விற்பனை செய்யலாம். உங்களின் வருமான வழிகளை அதிகரிக்க வேண்டும். ஓட்டோ ஓட்டுவோர் கடன்பட்டுள்ளனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். ஏற்றுமதிப் பொருளாதாரமாக எமது பொருளாதாரத்தை மாற்ற வேண்டும்.

இப்பிரதேசத்தில் காணி வழங்குவது தொடர்பில் வனவள திணைக்களம் சார்ந்த பிரச்சினை இருப்பதால் 1985 ஆம் ஆண்டு வரைபடத்தின் பிரகாரம் செயற்பட இருக்கிறோம். அவர்களை அழைத்து உங்கள் காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தருவோம். வீட்டு உரிமை வழங்க இருக்கிறோம். நடுத்தர வர்க்கத்தினருக்கு வீடுகளை நிர்மாணிக்க சலுகைக் கடன் வழங்குவோம். சஜித் ஆரம்பித்த வீடுகளுக்கும் நிவாரணம் வழங்குவோம். இவ்வாறு பணியாற்ற அநுரவினாலோ சஜித்தினாலே முடியுமா?

இந்த முன்னேற்றத் திட்டத்தை தொடரப் போகிறீர்களா, குழப்பப் போகிறீர்களா?

சிறந்த இலங்கையில் வாழ வேண்டுமா? பங்களாதேஷ் போன்று இருக்க வேண்டுமா? 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களிப்போம். இன்றேல் சிலிண்டரும் வெடிக்கும், நாடும் வெடிக்கும்." – என்றார்.

# கொஸ்கொடை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கொஸ்கொடை கடற்கரையில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கொஸ்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மிகவும் அழுகிய நிலையில் காணப்படுவதுடன் இவர் பல நாள்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பிரமுகர் ரூவான் போபகேக்கு ஆதரவு?

**(கே.வசந்தன்)**

மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பாளர் ரூவான் போபகேயின் ஆதரவுப் பிரசார கூட்டத்தில் ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், அரசியல் உயர் பீட உறுப்பினரும், தமிழ் பொது வேட்பாளர் கட்டமைப்பின் முக்கியஸ்தருமான அருந்தவராஜா (மேழிக்குமரன்) கலந்து கொண்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் ரூவான் போபகேக்கு ஆதரவான பிரசார கூட்டம் நேற்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் மேழிக்குமரன் கலந்து கொண்டமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ரூவான் போபகே அறகலய போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவர் ஆவார்.

மேழிக்குமரனே தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் பொதுக் கட்டமைப்பில் வவுனியா மாவட்ட நிதிக் கையாளுகைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டு இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.






# எரிவாயு விலையில் திருத்தம் ஏற்படாது




செப்டெம்பர் மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 3,690 ரூபாவிற்கும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு 1,482 ரூபாவிற்கும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயு 694 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பயணக் கட்டணங்கள் குறைக்கப்படமாட்டா



எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், ஓட்டோக் கட்டணத்தைக் குறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தொழில்ரீதியான ஓட்டோச் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஆயினும், தங்களது பயணக் கட்டணங்களைத் திருத்தியமைக்கும் அளவுக்கு எரிபொருள் விலை குறைக்கப்படவில்லையென அந்தச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், பஸ் பயணக் கட்டணத்தைக் குறைக்க முடியாது எனத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.



# கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம்

வங்காள விரிகுடாவின் மேற்கு மத்திய மற்றும் அதனை அண்மித்த வடமேற்கு விரிகுடாவில், நிலைகொண்டுள்ள தாழமுக்கம் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில், வடக்கு ஆந்திரா மற்றும் இந்தியாவின் தெற்கு ஒடிசா கடற்கரையை நோக்கி நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

மேற்படி கடற்பரப்புகளில் மணிக்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, கடற்றொழிலாளர்களை கடலுக்குச் செல்ல வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.



## விமானப்படைப் பெண் சிப்பாய் ஒருவர் தோட்டாவுடன் கட்டுநாயக்கவில் கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரீ – 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாவுடன் விமானப்படை பெண் சிப்பாய் ஒருவர் கைதாகியுள்ளார்.

நாட்டிலிருந்து டுபாய்க்குச் செல்ல முற்பட்டபோது விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், குருநாகல் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஓய்வு பெற்ற விமானப்படை சிப்பாயெனத் தெரியவந்துள்ளது.

அந்தத் தோட்டா தமக்குச் சொந்தமானது இல்லையென விசாரணைகளின்போது அவர் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.



## அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு 75 மில்லி மீற்றர் அளவில் மழை!

மேல், சபரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் சில பிரதேசங்களில் 75 மில்லி மீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

## இன்று தொடக்கம் டெங்கு ஒழிப்புக்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

நாட்டின் பல பகுதிகளில் இன்று முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 ஆயிரத்து 552 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களுக்கு வழிகாட்டப் போகின்றது என எல்லோரும் பார்த்திருக்கும் போதுதான், கூட்டத்துக்குத் தாம் போகாமல் விட்டால், கட்சி முடிவு ஏதும் எடுக்காமல், வெறுமனே கூடிப் பேசிக் கலைய வேண்டியதுதான் வழி என்று அவர் எண்ணுகின்றார் போலும்.

கட்சியின் நேற்றைய முடிவு குறித்து அவர் வெளியிடும் கருத்து அந்த எண்ணத்தைத் தான் தந்து நிற்கின்றது.

கட்சி ஒரு தீர்மானம் எடுக்கும் நிலையில் – பொது வேட்பாளருக்கு எதிரான முடிவை எடுக்கும் சூழ்நிலையில் – தாம் அந்த முடிவில் பங்குதாரராகி விட விரும்பாத மாவை அதற்காகவே நேற்றைய கூட்டத்தை சுகவீனத்தைக் காட்டித் தவிர்த்தார் என்பதே கட்சியினர் பலரதும் கருத்தாக இருந்தது.

அவர் கூட்டத்துக்கு வராதமையைக் கருதி கூட்டம் – கட்சி – உரிய தீர்மானத்தை, உரிய முறைப்படி எடுக்காமல் இருக்க வேண்டும் என்று அவர் கருதினால் அவர் ஜனநாயக அரசியலில் பிரக்ஞையுடன் இல்லை என்பதுதான் அர்த்தம்.

எனது இணக்கமில்லாமல் ஒரு தீர்மானமும் எடுக்காதீர்கள் என்றோ அல்லது எடுக்கும் சமயத்தில் தம்முடன் கலந்தாலோசிக்கும்படியோ கட்சியின் செயலாளருக்கோ அல்லது சிரேஷ்ட துணைத் தலைவருக்கோ மாவை அறிவுறுத்தல் வழங்கியிருந்தாலாவது இப்போது அவர் புலம்புவதில் அர்த்தம் இருக்க முடியும்.

தீர்மானம் எடுத்து முடிவை அறிவிக்க வேண்டிய சமயங்களில், அவற்றை முன்னெடுத்து, கட்சியை முறையாக வழிகாட்டாத கட்சித் தலைமையின் வக்கற்ற போக்குத்தான் இன்று கட்சி நிலைமை இப்படியாக இருக்கக்காரணம். கட்சித் தலைவராக நீடித்து, இன்னும் கட்சியை குட்டிச் சுவராக்கிக் கெடுத்து விட்டுத்தான் அவர் ஓய்வார் போலும்.

நேற்று வவுனியாவில் நடந்த தமிழரசு மத்திய குழு கூட்டம் ஆரம்பித்த போது 26 உறுப்பினர்கள் வரை இருந்தனர். கோரம் 11.

கட்சித் தலைவர் சுகவீனம் காரணமாக தம்மால் வரமுடியாது என்று அறிவித்தமையால் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரை கூட்டத்துக்குத் தலைமை வகிக்குமாறு முதலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி சி.வி.கே சிவஞானம் தலைமை வகித்து கூட்டத்தை நடத்தி முடித்திருக்கின்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கலாம் என்ற சார்பில் நான்கு உறுப்பினர்கள் மட்டுமே அங்கு கருத்து வெளியிட்டிருக்கின்றனர். கூட்டத்திற்கு கடிதம் அனுப்பி இருந்த சிறிதரன் எம்.பியையும் சேர்த்தால் ஐந்து பேர்.

எஞ்சியோரில் 17 பேர் பொது வேட்பாளரை ஆதரிக்கவே கூடாது என்ற நிலைப்பாட்டை உறுதியாக பிரேரித்துள்ளனர். கூட்டத்துக்குப் பின்னர் வந்து சேர்ந்தவர்களையும் சேர்த்து மொத்தம் எட்டு பேர் இவ்விடயத்தில் கருத்து வெளியிடவில்லை.

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்று ஆறு பேர் வலியுறுத்திக் கருத்து வெளியிட்டனர். சஜித் தவிர்ந்த வேறு வேட்பாளர்களை ஆதரிக்கும் முடிவை யாரும் வெளியிடவில்லை எனத் தெரிகின்றது.

இதில்முக்கியமானஅம்சம்,சஜித்பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்துப்பட சுமந்திரன் எம்.பி. கூட்டத்தில் வாயே திறக்கவில்லை என்பதுதான்.

கூட்டத்தில் கடைசி கட்டத்தில் இப்போது தபால் மூல வாக்களிப்பு வந்து விட்டமையால், இனிமேலும் பிந்தாமல் முடிவெடுக்க வேண்டியது அவசியம் என்று சுமந்திரன் வலியுறுத்தினார் எனத் தெரிகின்றது.

கடந்த வெள்ளியன்று கட்சித் தலைவர் மாவைக்கு தொலைபேசி அழைப்பு எடுத்த சுமந்திரன், கொழும்பில் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடன் நடைபெற்ற சந்திப்பின் விவரங்களை விலாவாரியாக மாவைக்கு விவரித்து இருக்கின்றார். அந்த ஊடாட்டத்தின் அடிப்படையில் உகந்த முடிவு ஒன்றை இரண்டு நாள்களில் – அதாவது நேற்று நடைபெறும் – மத்திய குழுவின் கூட்டத்தில் எடுக்க வேண்டியிருக்கும் என்பதை சுமந்திரன் அச்சமயம் மாவைக்குக் கோடி காட்டினார் என்றும் தெரிகிறது.

இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் கருத்து நிலைப்பாட்டை நேற்றைய தமிழரசு மத்திய குழு கூட்டத்தில் சுமந்திரன் வெளிப்படுத்தினார் என்றும் அறிய வந்தது.

மாவை சேனாதிராஜா, சிறீதரன் எம்.பி., மட்டக்களப்பு யோகேஸ்வரன், ஸ்ரீநேசன் ஆகியோர் கூட்டத்தில் பங்கு பற்றாதமையாலும், சட்டத்தரணி கே.வி. தவராஜா கூட்டத்தின் இடைநடுவில் எழுந்து சென்று விட்டமையினாலும் நேற்றைய கூட்டத்தில் எந்த அரசியல் முடிவும் – தீர்மானமும் – எடுக்கப் பட்டிருக்கக் கூடாது என்று சிலர் கருத்து வெளியிடுவது அபத்தமானது.

இன்னொரு கொசுறு தகவலும் உண்டு. மாவை,அவரது மகன் மற்றும் அவரின் மகனின் கூட்டத்தினர் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றனர் என்ற மாதிரியில் வெளியில் ஒரு கயிறு விட்டாலும், களத்தில் வேறு மாதிரிக் காரியங்கள் நடக்கின்றன.

வடிவேல் காமெடியில் வருவது போல தேர்தல் வாக்களிப்பின் போது அந்தச் சின்னத்துக்கு ஒரு குத்து, அதே சமயம் இந்தச் சின்னத்துக்கும் ஒரு குத்து என்ற மாதிரி, ஒருபுறம் பொது வேட்பாளர் புராணி பாடிக்கொண்டு, மறுபுறம் சஜித்துடன் ஒரு சகவாசம் வைத்திருக்கின்றனர் மாவையின் மகனும் அவரின் கம்பனியினரும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கண்டிக்குச் சென்று, அங்கு ஒரு கோயிலில் பிரேமதாஸவைச் சந்தித்து, மனம் விட்டு பேசி இருக்கின்றனர் அவர்கள்.



மகன் அங்கு சஜித்துடன் சகவாசம், அப்பாவோ இங்கு சஜித்தை ஆதரிக்கக் கட்சி எடுத்த முடிவு ஆச்சரியத்தை தருகின்றது என்கிறார்.

எது, எப்படியோ தமிழரசின் தலைவிதியை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று தொங்க விடுவதற்கு மற்றொரு வாய்ப்பு ஒரு தரப்புக்குக் கிட்டி இருக்கின்றது என்று சந்தோஷப்படலாம்...!

## சஜித்தை ஆதரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது என்று வவுனியாவில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்திருந்தார். இந்நிலையில், இது கட்சியின் முடிவல்ல என்றும், இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு என்றும் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுகயீனம் காரணமாக நேற்று வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் நான் பங்கேற்கவில்லை. நான் கட்சியின் தலைவர். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவான தீர்மானம் தொடர்பில் என்னுடன் எவரும் கலந்தாலோசிக்கவில்லை. இது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

கட்சியின் இந்த நிலைப்பாடு தொடர்பில் இதுவரை எனக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, சஜித்துக்கு ஆதரவான தீர்மானம் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு என்று ஏற்றுக் கொள்ள முடியாது. இது கட்சியின் முடிவல்ல. இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு.” – என்றார்.

தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்களான யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட் ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மன்னார் மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் பங்கேற்கவில்லை. இருவரும் இலண்டனில் தங்கி நிற்கின்றனர்.

மேலும், கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீனித்தம்பி யோகேஸ்வரன், ஞானமுத்து ஸ்ரீநேசன் ஆகியோரும் கலந்துகொள்ள வில்லை.

## மத்திய குழுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானம் இல்லை என்று கூறியிருந்தார்.இதுதொடர்பில்கட்சியின்பதில்பொதுச் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளவில்லை. சஜித்தை ஆதரிக்கும் மத்திய குழுத் தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். மத்திய குழுவில் 30 பேர் கலந்துகொண்டார்கள். மாவை சேனாதிராஜாவுக்கும் அறிவித்து அவரும் கூட்டத்துக்கு வருவதாக இருந்தார். இறுதியில் உடல் நிலை சரியில்லை என்று தெரிவித்து அவர் கலந்துகொள்ளவில்லை.

அதனால் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில்தான் கூட்டம் நடைபெற்றது. மத்திய குழுவின் தீர்மானம்தான் சஜித்துக்கு ஆதரவு வழங்குவது என்பது. அதனையே அறிவித்தோம். எதிர்வரும் 4 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு. அதனால் தீர்மானம் எடுக்கப்பட்டது. மாவை சேனாதிராஜாவுடன் ஏற்பனவே நான் கதைத்துள்ளேன். இந்தத் தீர்மானம் தொடர்பாகவும் நான் கதைக்கின்றேன். மூத்த துணைத்தலைலவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராஜாவை நேரில் சந்தித்து அவருடன் கதைப்பார்.” – என்றார்.



# இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றோம்

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவிப்பு

"இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தையும் நிராகரிக்கின்றோம். இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முடிவுக்கு கொண்டு வர உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும்."

– இவ்வாறு சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சம்புத்த ஜயந்தி கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினர் நிம்மதியில்லாமல் இருக்கின்றார்கள். அவர்கள் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்ததால்தான் அரசியல்வாதிகள் இன்று சுதந்திரமாக மேடை போட்டு தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள்.

இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்குடையவை. முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும்.

இராணுவத்தினர் இன்று கௌரவமாக வாழவில்லை. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு அவர்கள் முகங்கொடுத்துள்ளார்கள். அரசமைப்பின் ஊடாக முப்படையினரது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம். அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்போம்.

இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்து அரசியல் தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ள இராணுவத்தினர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் கௌரவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும்." – என்றார்.

## பெரும்பாலானவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

"வவுனியாவில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மத்திய செயற்குழுவில் உள்ள 39 பேரில் 27 பேர் கலந்துகொண்டனர். தலைவர் மாவை சேனாதிராஜா தன்னால் சுகயீனம் காரணமாக கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தார். வேறு ஏதும் காரணங்களுக்காகக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு அவர் கேட்கவில்லை. இதேநேரம் சி.சிறீதரன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான தனது விருப்பத்தை எழுத்தில் அறிவித்திருந்தார். யாப்பின் பிரகாரம் மத்திய செயற்குழுவின் கோரம் 11 பேராகவே காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையிலேயே மூத்த துணைத் தலைவரான எனது தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது 17 பேர் பொது வேட்பாளரான அரியநேத்திரனை ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிலும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் எழுத்து மூலமான முடிவு உட்பட 6 பேர் மட்டுமே ஆதரவாகக் கருத்துரைத்தனர். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் 22 பேர் கருத்துரைத்தனர்.

இவற்றின் அடிப்படையிலேயே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை, எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து உடனடியாக விலக வேண்டும், ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கல் ஆகிய 3 தீர்மானங்கள் எட்டப்பட்டன. இந்தத் தீர்மானங்களுக்கு நானும் கட்டுப்பட்டவன். இதேநேரம் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக ஏதும் பிரச்சாரக் கூட்டங்கள் இடம்பெற்றால் என்னால் மேடைக்கு வர முடியாது என்பதனையும் நான் பதிவு செய்திருந்தேன்."

– என்றார்.

## தமிழரசின் ஆதரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமூக ஊடகங்களில் இதனைப் பதிவு செய்துள்ள அவர் ",நாங்கள் இணைந்து அனைவரும் வெற்றி பெறும், இனவெறியில்லாத – பாரபட்சம் இல்லாத எதிர்காலத்தை உருவாக்குவோம்."

– என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வேண்டி புதுக்குடியிருப்பில் நேற்று பிரசாரக்கூட்டம்

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு ஆதரவாக புதுக்குடியிருப்பில் நேற்று பொதுக்கூட்டம் இடம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த கூட்டம் இடம் பெற்றது.

பொலிகண்டி முதல் பொத்துவில் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் “நமக்காக நாம்” பிரசார பயணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் மூன்றாவது நாளான நேற்று பொதுக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

தமிழர் பாரம்பரிய முறைப்படி கலை நிகழ்வுகள், காவடிகள் சகிதம் பொது வேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேத்திரன் ஊர்வலமாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டிருந்தார்.

பொதுக்கூட்டத்தின்போது தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் செல்வம் அடக்கலநாதன் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சிறீக்காந்தா, முன்னாள் வட மாகாணசபை விவசாய அமைச்சர் சிவநேசன், ஜனநாயகப் போராளிகள் கட்சியை சேர்ந்த வேந்தன், நகுலேஸ் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாமலின் ஆதங்கம்

‘அறகலய’ போராட்டத்தின் ஸ்தாபகர் ரணில் விக்கிரமசிங்க என்று இப்போது குற்றம் சுமத்தும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, அந்தப் போராட்டத்தை முன்னிறுத்தி ‘சிஸ்டம்’ மாற வேண்டும் என்று வலியுறுத்திய இளைஞர்கள் இன்று வீதியில் நிற்கின்றனர் என்று ஆதங்கப்படுகின்றார்.

அந்தக் கூற்று உண்மையாயினும், அதனைச் சுட்டிக்காட்டி அரசியல் செய்யும் தகுதி மொட்டுக் கட்சியினருக்கு உள்ளதா என்பதை நோக்குவதும் அத்தியாவசியமானதாகின்றது.

அறகலய நெருக்கடி சமயத்தில் ஆட்சித் தரப்புக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தபோது, அந்தக்கிளர்ச்சிக்குஆரம்பத்தில் முழு ஆதரவும் ஊக்குவிப்பும் தந்த எதிர்க்கட்சிப் பிரமுகர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர்.

இது தொடர்பில் - அந்தநேர நெருக்கடி தொடர்பில் - அப்போதைய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அவ்வப்போது ஒன்று கூடி உரையாடிய சமயங்களில், அவற்றில் முக்கிய பங்கு வகித்தவர் ரணில் விக்கிரமசிங்க. அந்தப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பதற்கான ஆலோசனைகளைக் கூட அச்சமயம் ரணில் முன்வைத்து வந்தார்.

ஆக, அறகலயப்போராட்டத்தின்ஸ்தாபகர் ரணில் விக்கிரமசிங்க என்று நாமல் ராஜபக்ஷ இப்போது குறிப்பிடும் அம்சத்தில் புதுமையோ ஆச்சரியமோ எதுவுமே இல்லை.

மொட்டுக் கட்சியின் பிரமுகரான அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் பதவியை ஏற்க வருமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கும் வரை, அறகலய போராட்டத்திற்கு முழு ஆதரவாளராகவும் வழிகாட்டுபவராகவும் அனுதாபியாகவும் இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க என்பது அனைவருக்கும் தெரியும்.

அவரை அச்சமயம் பிரதமர் பதவியை ஏற்பதற்கு அழைத்த அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இப்போதைய ஜனாதிபதி வேட்பாளரும் கோட்டாபயவின் பொறாமகனுமானன நாமல் ராஜபக்ஷ உட்பட மொட்டுக் கட்சியினர் அனைவருக்கும் அந்த உண்மை அப்போதே தெரிந்திருந்தது.

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதிக்கும் அக்கட்சியின் அரசுக்கும் எதிராக அறகலய கிளர்ச்சி வெடித்தபோது அந்தப் போராட்டத்திற்குப் பின்புலமாக நின்று வலுச் சேர்த்து, வழிகாட்டியவர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என்று தெரிந்துகொண்டுதான், அந்த அறகலய போராட்டத்தை எதிர்க்க வேண்டிய தமது அரசின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார்.

இப்போது ரணில் குறித்து விமர்சிக்கும் மொட்டுவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு கூட அது நன்கு தெரிந்திருந்தது. அத்தகைய பிரதமரான ரணிலுக்கு, அவர் பின்னர் ஜனாதிபதியாகித் தமது அரசை கொண்டு நடத்துவதற்கான ஆதரவை முழு அளவில் வழங்கி நின்றவர்கள்தான் நாமல் ராஜபக்ஷ உட்பட மொட்டுக் கட்சியினர்.

இப்போது பழையனவற்றையெல்லாம் மறந்துவிட்டு புதிதாக உண்மையைக் கண்டுபிடித்தவர் போல ‘சிஸ்டம் மாற வேண்டும் என்பதற்காக அறகலயவில் வீதிக்கு இறங்கி போராடிய இளைஞர்கள் இன்று இன்னும் வீதியிலே நிற்கின்றார்கள். அந்த அறகலய போராட்டத்துக்குத் தூண்டியவர்கள் அதிகாரத்தை அனுபவிக்கின்றனர்’ என்று விசனப்படுகின்றார் நாமல் ராஜபக்ஷ.

இந்த இரண்டு ஆண்டுகளும் ரணிலின் அரசுக்கு முண்டு கொடுத்துத் தாங்கி பிடித்தவர்கள், இப்போது திடீரென விழித்தெழுந்து ரணிலுக்கு எதிராக முழக்கம் செய்வது அர்த்தமற்றது; அபத்தமானது.

# 2026 இல் விஜய்யுடன் கூட்டணி இல்லை; தனித்தே போட்டி என சீமான் திட்டவட்டம்

"2026 இல் தனித்து போட்டியிடுகிறேன். 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நியமித்துவிட்டேன்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களை நேற்று சந்தித்த சீமான் கருத்து தெரிவிக்கையில்,

"இந்த பார்முலா பந்தயம் யாருக்கானதாக இருக்க வேண்டும். நாங்கள் படிக்கும் காலத்தில் எல்லாம் ஓடுவதற்கு திடல் இல்லை, கைப்பந்து, இறகுப் பந்து, கால்பந்து எதுவும் விளையாட எங்களுக்கு வழியில்லை. இதைப் போல சிற்றூர்களில் இருக்கும் பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுத்து விளையாட்டு வீரர்களாக மாற்றுவது என்பது சரி. ஆனால் இப்போது பார்முலா 1 பந்தயத்தில் கலந்து கொள்பவர்கள் எல்லாம் யார்? நம்மாட்கள் யாராவது ஓட்டுகிறார்களா?

இரண்டு மருத்துவமனைகள் இருக்கும் இடத்தில் இதனை வைத்திருக்கிறீர்கள். இது மேல்தட்டு மக்களுக்கான விளையாட்டு. அவ்வளவு போக்குவரத்து நெரிசலை உண்டு பண்ணி இதை நடத்த வேண்டுமா? சாலையெல்லாம் சவக்குழிகளாக உள்ளன. அதை முதலில் சரிசெய்யுங்கள்." – என்றார்.






மேலும், 2026 சட்டப்பேரவை தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த சீமான்,

"2026 இல் தனித்து போட்டியிடுகிறேன். இப்போதைக்கு 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நியமித்துவிட்டேன்." – என்றார்.

# ராகுலும், விஜய்யும் என்ன பேசினார்கள்?

## அவர்களுக்கு தான் தெரியும் என்கிறார் செல்வப்பெருந்தகை



10 ஆண்டுகளுக்கு முன்பு விஜய்யும், ராகுல் காந்தியும் சந்தித்தனர். அப்போது அவர்களுக்குள் என்ன பேசினார்கள் என்பது அவர்களுக்கு மட்டும் தான் தெரியும் என தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் அங்குள்ள ஒய்.பி.ஏ அரங்கில் ஞாயிற்றுக்கிழமை மதியம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை கலந்து கொண்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்த செயல்வீரர்கள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இறுதியாக நீலகிரி மாவட்டம் உதகையில் இந்தக் கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் பல உள்ளன. குறிப்பாக பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை 35 ரூபாவாகவும், படுகர் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது, கூடலூர் பகுதியில் இருந்து வரும் செக்சன் 17 பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு போன்றவை இருந்து வருகிறன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செக்சன் 17 குறித்து எம்.எல்.ஏ. குழுக்கள் ஆய்வு செய்து தமிழக முதல்வரிடம் அறிக்கையை சமர்ப்பித்து, நடவடிக்கை எடுக்கக்கோரி அழுத்தம் தந்து வருகிறோம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு நடிகர் விஜய்யும், ராகுல் காந்தி சந்தித்தனர். ஆனால் என்ன பேசினார்கள் என்பது தெரியாது. அது அவர்களை கேட்டால் தான் தெரியும். அவருக்கு என்ன அறிவுரைகள் சொன்னார் என விஜய்யைத் தான் கேட்க வேண்டும்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை படிப்பதற்காக சென்றுள்ளார். முதல்வர் அந்நிய முதலீடுகளை தமிழகத்துக்கு கொண்டு வர அமெரிக்கா சென்றுள்ளார். உலக நாடுகள் தமிழகத்தை நோக்கி வருகின்றன. இங்குதான் தொழில் செய்வதற்கு உகந்த இடம். ஒரு டிரில்லியன் பொருளாதாரத்தை நோக்கி செல்வதற்காக முதல்வர் முயற்சித்து வருகிறார். அவர் பயணம் வெற்றி அடைய வாழ்த்துகிறேன்.

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் போல் இனி ஒரு சம்பவம் நடக்கக் கூடாது. காங்கிரஸ் ஆட்சியில் 2013 ஆம் ஆண்டு நிர்பயா சம்பவத்தை பெரிதுப்படுத்தினர். பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றார்கள். பிரதமர் செங்கோட்டையில் கொடி ஏற்றும் போதெல்லாம் பெண்களின் பாதுகாப்பு பற்றி பேசுகிறார். அதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை. எங்கு பார்த்தாலும் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்படுகிறது.

மன்மோகன் சிங் ஆட்சி காலத்தில் நிர்பயா நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியை சரியான முறையில் செலவழிக்கவில்லை என்று பல அறிக்கைகள் சொல்கின்றன. மணிப்பூருக்கு திறக்காத வாய் மேற்குவங்கத்துக்கு திறக்கிறது. மணிபூரில் பா.ஜ.க. ஆட்சி. மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சி.

அதேபோல் இருமொழிக் கொள்கை என்பது தமிழகத்தினுடைய பாலிசி. அந்த இரு மொழிக் கொள்கையை மாற்ற வேண்டும் என முயற்சி செய்கிறார்கள். பிஎம் ஸ்ரீ என்ற திட்டத்தை கொண்டு வந்துள்ளனர். அது இரு மொழிக் கொள்கைக்கு எதிரானது. வெளிநாடுகளில் இருந்து பல கலைக்கழகங்களுடன் இணைந்து இந்திய நாட்டில் பல கலைக்கழகங்களை உருவாக்கலாம். ஆனால் மத்திய அரசு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை திறக்கலாம் என்று கூறுகிறது. அப்படி என்றால் நமது பேராசிரியர்கள் ஆசிரியர்களும், குறைந்தவர்கள் அல்ல அனைவருமே வல்லவர்கள் தான். நல்லாசிரியர் விருது பெறுபவர்கள் தான். ஆகையால் இதில் முரண்பாடு உள்ளது. கூட்டாட்சி தத்துவம் மற்றும் மாநில சுயாட்சிக்கு எதிரானது. எனவே, மத்திய அரசு இப்படிப்பட்ட கெடுபிடியை பிடிக்கக் கூடாது. எனவே உடனடியாக தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய உரிமையை அவர்கள் கொடுக்க வேண்டும்.

அ.தி.மு.க. ஆர்.பி.உதயகுமார், அண்ணாமலை வெளிநாடு சென்றதால் தமிழகத்தில் அமைதி நிலவுகிறது என்கிறார். கொஞ்ச நாள்களாகவே அவர்கள் இருவரின் மத்தியில் என்ன பகை என்பது தெரியாது கொள்கை ரீதியான பகையா? வேறு ஏதாவது பகையா? ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசி வருகின்றனர் அண்ணாமலை வெளிநாடு சென்று வரட்டும் அதன் பின்பு பார்க்கலாம்.

தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி வலிமையாக உள்ளது. இண்டியாகூட்டணி தேசத்திற்கு வழிகாட்டும் கூட்டணியாக உள்ளது. தி.மு.க. உடன் உள்ள கூட்டணி கட்சிகள் வேறு கட்சிக்கு செல்வதாக கூறப்படுவது வதந்தி. அப்படி யாரும் செல்ல மாட்டார்கள். 2026 ஆம் ஆண்டு இந்த இந்தியா கூட்டணி தொடரும் வெற்றியை பெறும் ஆட்சியைப் பிடிக்கும்." – என்றார்.




# மாயமான ஹெலிக்கொப்டர் விபத்து; இதுவரை 17 பேரின் சடலங்கள் மீட்பு

காணாமல்போன நிலையில் தேடப்பட்டுவந்து ரஷ்யாவின் எம்ஐ-8 டி ரக ஹெலிக்கொப்டர் கிழக்கு கம்சட்கா பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

3 பணியாளர்கள் உட்பட 22 பேருடன் பயணித்த அந்த ஹெலிக்கொப்டர் நேற்று முன்தினம் கிழக்கு கம்சட்கா பகுதியில் வைத்து மாயமானது.

இதனையடுத்து குறித்த வானூர்தியைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் வானூர்தி விபத்துக்குள்ளான இடத்திலிருந்து 17 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக 2021 ஆம் ஆண்டும் இந்த பகுதியில் ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பின் பிரசார மேடையில் மர்ம நபர் ஏறியதால் பரபரப்பு

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு பின் மீண்டும் பென்சில்வேனியாவில் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப்பின் பிரசார மேடையில் மர்ம நபர் ஒருவர் அவரை நெருங்க முயற்சித்த செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாடி வைத்த நடுத்தர வயது நபர் ஒருவர், பொதுமக்கள் தடையை மீறி செய்தியாளர்கள் இருந்த பகுதிக்குள் நுழைந்து மேடையில் ஏற முயன்றுள்ளார்.

இதன்போது, அவரை தடுத்து நிறுத்திய பொலிஸார் அங்கிருந்து அழைத்துச் சென்றுள்ளதுடன் சிறிது நேரத்திலேயே கூட்டத்திலிருந்த மற்றொரு நபரையும் கைது செய்துள்ளனர்.




மேலும், மேடையில் ஏற முயன்ற மற்றும் இரண்டாவது நபருக்கும் தொடர்பு உள்ளதா என்று தெரியவராத நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பணயக்கைதிகள் கொல்லப்பட்டமைக்கு பழி தீர்ப்போம்; நெதன்யாகு சூளுரை



பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட ஆறு பேர் கொல்லப்பட்டமைக்கு காரணமான ஹமாஸ் தலைவர்களை பழி தீர்ப்போம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினால் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட ஆறுபேரின் உடல்களை தெற்கு காசாவிலுள்ள சுரங்கப்பாதை ஒன்றிலிருந்து மீட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இதற்கு காரணமானவர்களை இஸ்ரேல் கண்டுபிடித்து தண்டிக்கும் என்றும், எஞ்சியுள்ள கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தை அடைவதற்கு தாம் உறுதியாக இருப்பதாகவும் பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

இருப்பினும், பணயக்கைதிகள் மற்றும் காணாமல் போன குடும்பங்கள் சங்கம், ஏற்பட்டுள்ள இறப்புகளுக்கு நெதன்யாகு பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தொடர் வான்வழித் தாக்குதல்களின் விளைவாகவே மேற்படி ஆறு கைதிகளும் கொல்லப்பட்டனர் என ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்று அறிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது, இந்த ஆண்டின் தொடக்கத்தில், இஸ்ரேல் மேற்கொண்ட குண்டுவீச்சின் காரணமாக சிறைபிடிக்கப்பட்ட மேலும் ஏழு கைதிகள் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீனிய குழு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேச விசாரணைக்குச் செல்ல நீதி அமைச்சர் அலி சப்ரி தயாரா?

## ரெலோ பகிரங்க சவால்





காணாமலாக்கப்பட்டோர் எத்தனை பேர் என்ற வாய்க் கணக்குகளைச் சொல்வதை விடுத்து, சர்வதேச விசாரணை நடத்துவதன் மூலமாகவே சரியான கணக்கினை அறிந்து கொள்ள முடியும். அப்பொழுதுதான் யார் பொய் சொல்லுகிறார்கள், யார் உண்மை சொல்லுகிறார்கள் என்பது வெளி வரும். அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் முடியும். அதை விடுத்து காலத்துக்கு காலம் வெளிவிவகார அமைச்சர்களாக வருபவர்கள் தங்கள் மனக்கணக்குகளின் படி காணாம லாக்கப்பட்டோரின் எண்ணிக்கையைக் கூறுவது அபத்தமாகும்.

– இவ்வாறு ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சர்வதேச பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம், காணாமலாக்கப்பட்டு இருக்கலாம் என்று சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உண்மையைக் கண்டறிவது அரசினுடைய கடமை. அதற்கான நியாயபூர்வமான விசாரணையை நடத்துவதும் அரசின் கடமை. உள்ளூர் விசாரணைகளின் மூலம் நீ பொய் சொல்லுகிறாய், நான் பொய் சொல்லுகிறேன் என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதனால்தான் சர்வதேச விசாரணை கோரப்படுகிறது. சர்வதேச விசாரணையின் மூலமே சரியான தரவுகளையும், காணாமலாக்கப்பட்டவர்களுடைய ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய எண்ணிக்கையும் அறிந்து கொள்ள முடியும்.

இதனால் தான் நாம் சர்வதேச விசாரணையை கோருவதோடு ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகரும் மனித உரிமை பேரவையும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கும் நிலையே நீடிக்கினறது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியினுடைய கருத்தும் சர்வதேச விசாரணையை கோருவதே சாலச் சிறந்தது என்று தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது. அவர் கூறும் எண்ணிக்கையை தமிழ் மக்களோ சர்வதேச பொறிமுறைகளோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதையும் வெளிவிவகார அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

காலத்துக்கு காலம் வாய் கணக்குகளை வெளியிடுவதை விடுத்து இம்முறை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எதிர்கொள்ள இருக்கும் பிரேரணைக்கு இண அனுசரணை வழங்கி சர்வதேச விசாரணை மூலமாக பொறுப்பு கூறல் நல்லிணக்கத்திற்கு அரசு தயாராக வேண்டுமே தவிர இந்த மாதிரியான கருத்துக்கள் எந்த முடிவுக்கும் இட்டுச் செல்லா.

சரியான கணக்குகளை அறிந்து கொள்ள அமைச்சர் அலி சப்ரி அவர்கள் சர்வதேச விசாரணைக்கு தயாரா? என்பதற்கு அவர் பதில் கூற வேண்டும்.

– என்று உள்ளது.

# வலையில் சிக்குண்ட புலி மரணித்த நிலையில் மீட்பு





வலையில் சிக்கிய புலி மரணித்த நிலையில் நேற்று மதியம் ரந்தெனிகல மிருக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மவுசாக்கலை தோட்ட லக்கம் பிரிவில் விளையாட்டு திடல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வலையில் சிக்கிய புலி இன்று காலை முதல் மீட்பு பணியில் ஈடுபட்டு வந்த நல்லதண்ணி வனப் பாதுகாப்புப் பிரிவினரிடம் முறையான வைத்திய உத்தியோகத்தர் இல்லாத காரணத்தால் மரணித்த நிலையில் நேற்று மதியம் ரந்தெனிகல மிருக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது.

கொட்டும் மழையில் நனைந்து கொண்டே வன பாதுகாப்பு அதிகாரிகள் மேற் கொண்ட முயற்சி பலனின்றிப் போக புலி மரணித்து உள்ளது.

இறந்த புலியின் உடல் அப் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் தூக்கி வந்து வன பாதுகாப்பு அதிகாரிகள் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

மிருக வைத்திய அதிகாரி ஒருவர் குறித்த நேரத்தில் வராமை காரணமாக புலி மரணித்து விட்டது என்று கூறப்பட்டது.

குறிப்பாக ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ பகுதியில் கடந்த சில வருடங்களாக மிருக வைத்திய அதிகாரி ஒருவர் இல்லை என்பதால் கம்பளை, கண்டியில் இருந்து மிருக வைத்திய அதிகாரி ஒருவர் வரும் வரை மிருகங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.



# வவுனியாவில் ரணிலின் கூட்டம் பெருந்திரளில் மக்கள் வெள்ளம்

(கே.வசந்தன்)

வவுனியாவில் ரணில் விக்கிரம சிங்க அவர்களின் பிரச்சார கூட்டம் பெருமளவான மக்கள் கூட்டத்துடன் நேற்று நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் ஆகியோ ரின் ஏற்பாட்டில் வவுனியா, வைரவ புளியங்குளம் யங்ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் கூட்டம் இடம்பெற் றது.

குருமன்காடு மற்றும் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்து ஊர்வல மாக சென்ற மக்கள் மைதானத்தை சென்றடைந்ததும் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. சுமார் ஐயாயிரம் வரை யிலான மக்கள் இதில் கலந்து கொண்ட னர்.

இதில், ஜனாபதி ரணில் விக்கிரம சிங்க, வெளிவிவகார அமைச்சர் அல்சப்ரி, நீர்வழங்கல் வடிகாலமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்ட மான், உயர்கல்வி இராஜாங்க அமைச் சர் சுரேன் ராகவன், சிறிரெலோ கட்சி யின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, முன்னாள் அமைச்சர் சுமதிபால, சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் வாசல, ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ம.மயூரதன், மதகுருமார்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2024




இன்று பதற்றமான சூழ்நிலைகள் காணப்படும். அதனை சமாளிப்பதற்கு கால தாமதமாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல. சில சௌகரியங்களை விட்டுகொடுக்க நேரும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவினங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டிய சூழல் ஏற்படும். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று வெற்றிகரமான பலன்களை காண்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இன்று பணிகள் நிலுவையில் இருக்கும். தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இதனை தவிர்த்தல் நல்லது. அமைதியாக இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரியுங்கள்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன்கள் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். உங்களின் உறுதியும் தைரியமும் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். மொத்தத்தில் இன்று காணப்படும் வளர்ச்சி உங்களுக்கு தன்னம்பிக்கையை கொடுக்கும்.

இன்று புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமான நிலையை பராமரிப்பீர்கள். அதிக சிந்தனைகளை தவிர்த்தல் வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அமைதி பெறலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். எனவே தவறுகள் நேரலாம். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்களின் எரிச்சல் மனப்பான்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நட்பு முறையில் அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பண இழப்பு ஏற்படலாம். தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்க தெளிவான மன துடன் இருக்க வேண்டும்.

பணிகள் கடினமாக காணப்படும். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் தோன்றும் கசப்பு உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

இன்று கூடுதலான தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலைகள் உண்டாகும். பண இழப்புகளும் காணப்படும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனைத் தரும்.




இன்று பலன்களில் ஏற்றத்தாழ்வு காணப்படும். உங்கள் பணிகள் சுமுகமாக நடக்க நீங்கள் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். நல்ல பலன்களைப் பெற நம்பிக்கையோடு இருங்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் பிரியமானவரை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலை சீராக இருக்காது. இன்று நிதி நிலையை சமாளிப்பது கடினம்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெற கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்கள் ஆற்றலை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள். உங்கள் வளர்ச்சி இன்று உறுதி. இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் கடின உழைப்புக்கு உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்களின் நம்பிக்கை உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணபுழக்கம் சீராக இருக்கும். உங்கள் ஆற்றலை நிதி வளர்ச்சிக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2024




இன்று நீங்கள் எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று புதிய மனிதர்களின் சந்திப்பை பெறுவீர்கள். இதனால் உங்களின் தொடர்பு வட்டாரம் விரிவடையும். வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தினால் திறமையான முறையில் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை அல்லது விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். பணம் வருவதற்கான அதிர்ஷ்டம் குறைவு.

தூக்கமின்மை மற்றும் மன உளைச்சல் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். முன்னேற்றத்தை நோக்கி செல்வீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று பலன் தரும்.

உங்கள் தனித் திறமைக்காக பாராட்டப் படுவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்களின் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் பிரியமானவரை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருங்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தி அளிக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீட்டு முயற்சிக்கான திட்டங்களை வகுக்கலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உயர்ந்த ஆற்றலும் உறுதியும் உங்களிடம் காணப்படும்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை இழக்கக் கூடிய கடினமான சூழ்நிலை காணப்படும். நம்பிக்கையுடன் சவால்களைக் கையாள வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது நல்ல பலனைத் தரும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை முடிப்பதில் தாமதங்கள் நேரலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்களின் சிறந்த பேச்சாற்றல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை கொண்டிருப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த முடியும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும்.




இன்று நீங்கள் விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன்களை தரக்கூடிய திட்டங்களை வகுப்பீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமான பலன்களைத் தரும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

பணியில் காணப்படும் பதற்றம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டும். இருவரிடையே நல்லுறவு ஏற்பட விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும். நிதி பாதுகாப்பு காணப்படும்.





